வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் கட்டிடம் கூட மாணவர்களுக்குப் போதிய சுகாதார வசதியும் இடவசதியும் இல்லாது இருக்கின்ற நிலையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலனை செய்து அதிகப்படியான ஆதிதிராவிட மாணவர்கள் படிக்கின்ற சீர்காழிப் பகுதியான அந்தத் தலைமைப் பகுதியிலே மீண்டும் ஒரு விடுதி கட்டித் தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் சீர்காழியில் ஆதிதிராவிட மாணவர் விடுதிக்குக் கட்டிடம் கட்டப் போதிய நிலம் தற்போது தயாரான நிலையில் இல்லை. போதிய நிலம் கையகப்படுத்தப்பட்டால் அரசு அதை பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நெய்வேலியில் உள்ள இலங்கை அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் திட்டம்.

*2095— திரு. என். கணேசமூர்த்தி: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மாவட்டம் நெய்வேலியில் உள்ள இலங்கை அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கணேசமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கழக ஆட்சியில்தான் நெய்வேலி பகுதியிலே வாழ்கின்ற அகதிகளுக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கப் பட்டது. விவசாயிகளின் நிரந்தர வேலைவாய்ப்புக்கு விவசாயப் பண்ணை அமைத்துக் கொடுக்கப்பட்டது. இதற்கு முன்பிருந்த அரசு நிர்வாகத் திறமையின்மையின் காரணமாக அந்தப் பண்ணையை மூடிவிட்டது. இப்போது இருக்கின்ற அரசு மறுபடியும் பரிசீலனை செய்து அந்தப் பண்ணையை மீண்டும் துவக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

9-55 மணி.

மாண்புமிகு திரு. கே, என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அதுபோல ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து கவனத்தில் கொள்ளப்படும்,

1990 மார்ச் 19]

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி பகுதியில் பர்மா அகதிகள், இலங்கை அகதிகள் போன்றவர்களுக்காகக் கட்டப்பட்ட விடுதிகளை தற்போது எத்தனை அகதிகள் பயன்படுத்துகிறார் கள்? ஏற்கெனவே நிறைய செலவு செய்து விவசாயப் பண்ணை கழகம், நிறைய குழாய்க் கிணறுகளை எல்லாம் போட்டு வேலை வாய்ப்பு ஏற்படுத்தியிருந்தது, அந்த விடுதிகள் யாரிடம் இருக்கின்றன? கட்டப்பட்ட விடுதிகளில் அகதிகள் குடியிருக் கிறார்களா அல்லது வாடகைக்கு விடப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த நமது அரசு மத்திய அரசின் நிதியுதவியோடு நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திட மிருந்து நிலத்தைப் பெற்று அங்கே ஒரு பண்ணையை ஏற்படுத்தி அந்தப் பண்ணையில் அவர்களைக் குடியமர்த்தும் பொருட்டு ஒரு கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு அரசின் சார்பில் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பண்ணை நஷ்டத்தில் இருந்ததால், அந்தப் பண்ணையை மூடிவிட்டு, அவர்களுடைய சொந்தப் பொறுப்பில் அவர்களே கூட்டுறவு முறையில் பண்ணையை அமைத்துக் கொள்ளவோ வேறு ஏதாவது தொழில் செய்து கொள்ளவோ ஒவ்வொரு குடும்பத் திற்கும் ஐந்தாயிரம் ரூபாய் வீதம் நிதி தரப்பட்டிருக்கிறது, அங்கே எத்தனை பேர் குடியிருக்கிறார்கள் என்று கேட்டிருக்கிறார் கள். என்னிடம் தற்போது அந்த விவரங்கள் இல்லை. தனி யாகக் கேள்வி கேட்டால், அந்தச் செய்திகள் தரப்படும்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை அகதிகள் வேறு மாநிலங்களுக்கு அனுப்ப பட்டு இருக்கிறார்களே, அவர்களைச் சொந்த மாநிலமான தமிழகத்திற்கு அழைத்துவர ஏற்பாடுகள் அரசிடம் இருக் கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்புமிகு உறுப்பினர் பெருமக்களே, வினாக் கேட்பவர்களுக்கு ஓர் அறிவிப்பு. வினாக் கேட்பவர்கள் (குறுக்கீடு). உட்காருங்கள், சொல்கிறேன். நான் அறிவித்துக் கொண்டிருக்கிறேன், (குறுக்கீடு) நான் வினா நேரம் முடிந்தது என்றே சொல்லவில்லை, உங்களுக்கு ஏன் இவ்வளவு அவசரம்? கொஞ்சம் நடவடிக்கைகளைக் கவனியுங்கள், உட்காருங்கள்.

ஓர் அறிவிப்பு. வினாக் கேட்பவர்கள் அருள்கூர்ந்து வினாவை மட்டும்தான் கேட்க வேண்டும். நன்றி தெரிவிப்பது,

பாராட்டுத் தெரிவிப்பது என்று நீங்கள் பெரிய அளவில் ஆசைப் பட்டால், வெளியில் பெரிய அளவில் ஏற்பாடு செய்து எங்களையும் சேர்த்துக் கூப்பிட்டுப் பெரிய அளவில் பாராட்டு விழாவை நடத்திக் கொள்ளலாம். ஏற்கெனவே அறிவித்தபடி வினாக்கள் கேட்கிறபோது நன்றி அறிவித்தல், பாராட்டு அறிவித்தல் என்ற சொற்களை அருள்கூர்ந்து தவிர்க்க வேண்டுமென்றும், அதே நேரத்தில் 'நான் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்' என்று சொல்வதையும் விட்டுவிட்டு, 'தெரிந்து கொள்வதற்காக இந்த வினாவைக் கேட்கிறேன்' என்று சொல்கின்ற முறையில் வினா அமைப்பை வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையில் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. உரிமை மீறல் பிரச்சினை.

17–3–1990 ஆம் நாளன்று அ.இ.அ.தி.மு.க.வினர் வெளிநடப்புச் செய்த பிறகு நிதிநிலை அறிக்கையை முதல்வர் வாசித்தபோது அவையில் எதிர்க்கட்சித் தலைவரும் துணைத் தலைவரும் அமர்ந்திருப்பதாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப் பெற்றுள்ளது குறித்து.

*திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையினுடைய உரிமை மீறல் என்ற அடிப்படையில் விதி 219–ன் கீழ் ஒரு அவை உரிமை மீறல் பிரச்சினையை நான் எழுப்புவதற்காக உங்களிடத்தில் அனுமதியைக் கோரியிருக்கிறேன். நான் இந்த அவையில் உரிமைமீறல் பிரச்சினையை எடுத்துச் சொல்வதற்கு முன்னால் பேரறிஞர் அண்ணா அவர்கள் 13–11–1961-ல் இந்தச் சட்டமன்றத்தில் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். ''சட்டமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி, நீங்கள் எங்களை அழிப்பதற்குத் தீட்டிவரும் திட்டங்களை நாங்கள் அறிவோம். உங்களிடத்திலே கத்தி இருந்தால் அதைத் தீட்டிக் கொண்டு வாருங்கள். சட்டம் இருந்தால் அமல் செய்யுங்கள். நாங்களும் எங்கள் இரத்தத்தைச் சிந்தத் தயாராக இருக்கிறோம். எங்களுடைய கொள்கையில் எங்களுக்குள்ள உறுதியே எங்களுக்கு வெற்றியைத் தேடித் தரும்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் 1961 ஆம் ஆண்டில் இந்தச் சட்டமன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இன்றைக்குப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன**(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.